1989 மார்ச் 30] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இல்லாமல் அத்தனை ஏழை மக்களுக்கும் இந்த அப்பார்ட்மெண்ட் திட்டம் மூலமாக வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொடுக்ககூடிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டும். ஏற்கெனவே 1967லே கொடுத்ததுபோல இருக்கக்கூடாது. ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். அன்றைக்கு உடனே ஒருபடி, படிப்படியாக 3 படி கொடுப்போம் என்றும் இல்லாவிட்டால் முச்சந்தி என்று சொல்லி இருந்தீர்கள். அது நடைபெறவில்லை. அப்படி நடைபெறாமல் இந்த திட்டம் போய்விடக்கூடாதே என்ற கவலை எனக்கு இருக்கிறது. அப்படி இல்லாமல் இந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(இ) பேரவை நடவடிக்கைகளைக் காண வருகை தந்துள்ள டாஸ்மேனியாப் பாராளுமன்றத் தலைவருக்கு வரவேற்பு.

Mr. SPEAKER: I am glad to inform the House that Mr. Tony Rundle Hon. Speaker of Tasmanian Parliament and Mrs. Rundle, are now witnessing the proceedings of the Legislative Assembly.

I, on my own behalf and on behalf of all Members of the Legislative Assembly wholeheartedly welcome them to the State of Tamilnadu. (Cheers)

(முற்பகல் 11-10)

*திரு. மா. பன்னீர்செல்வம் : தமிழனின் பெருமையை உயர்த்திப் பிடித்து தமிழின் இனிமையை பறைசாற்றுகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டிற்கு முதலமைச்சராய் வருதல் வேண்டும்'' என்கிற பாவேந்தர் பாரதிதாசன் விருப்பம் மட்டுமல்ல கோடிக் கணக்கான தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்றி மீண்டும் தமிழக முதல்வராய் பொறுப்பேற்றிருக்கிற எங்களையெல்லாம் இயக்கிக்கொண்டிருக்கிற தமிழனத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களே, வணக்கம்.

''வன்கன் குடிகாத்தல் கற்றறிதல், ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு'' என்கிற வள்ளுவர் பெருந்தகையின் இலக்கணத்திற்கொப்ப அஞ்சாமையும், குடிப்பிறப்பும், முயற்சியும் கொண்டு தமிழகத்தை மீண்டும் பொற்காலமாக மாற்ற 1989—90 ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை நாட்டிற்கு சமர்ப்பித்துள்ளீர்கள்.